# முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No.320/2019

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16ம் தேதியன்று **PW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சந்தோஷ் பாலு** | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக என் மனைவி தமிழரசி இறப்பு சான்றிதழ் அசல் **வாசாஆ 1**. தமிழரசியின் வாரிசு சான்றிதழ் இணைய வழி நகல் **வாசாஆ 2**. 13.12.2017 - 18.8.2018 வரை என் மனைவி 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான சிகிச்சை வரலாறு **வாசாஆ 3**. 10.2.2018, 21.4.2018, 14.7.2018 தேதிகளில் சோனா லைன் ஸ்கேன்ஸ் சென்னிமலையில் ஸ்கேன் எடுத்தற்கான அறிக்கை **வாசாஆ 4**. சூரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் என் மனைவி கர்பமானதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணம் **வாசாஆ 5**. அதே ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய் சேய் நல மருத்துவ பதிவேடு அசல் **வாசாஆ 6**. 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் என் மனைவி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் **வாசாஆ 7**. 4ம் பிரதிவாதி தரப்பில்

வழங்கப்பட்ட ரசீதுகள் எண்ணிக்கை 3 **வாசாஆ** 8. 4 ம் பிரதிவாதி வழங்கிய மருந்து பில்கள் எண்ணிக்கை 5 **வாசாஆ** 9. என் மனைவி இறந்ததற்கான 4 ம் பிரதிவாதி வழங்கிய இறப்பு விவர அறிக்கை அசல் **வாசாஆ** 10. என் மனைவி இறந்ததற்கான காரணம் குறித்து 4 ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட சான்றிதழ் **வாசாஆ** 11. குழந்தை இறப்பிற்கான காரணம் குறித்து வழங்கிய சர்பிகேட் **வாசாஆ** 12. தமிழரசி M.Phil computer science படித்தவர் என்பதை காட்டும் சான்றிதழ் **வாசாஆ** 13. அண்ணா யுனிவர்சிட்டி கோவையில் வழங்கப்பட்ட டிகிரி சர்பிகேட் **வாசாஆ** 14. என் மனைவி தமிழரசி TRB தேர்வு எழுதியதற்கான ஹால் டிக்கட் இணைய வழி நகல் **வாசாஆ** 15. TNPSC ல் வழங்கப்பட்ட ஹால் டிக்கட் இணையவழி நகல் **வாசாஆ** 16. டேலன்ட் மேக்சிமஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் சென்னையால் வழங்கப்பட்ட சான்றிதழ் அசல் **வாசாஆ** 17. என்னுடைய ஆதார் அட்டை **வாசாஆ** 18 (**அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது**). எங்களுடைய குடும்ப அட்டையின் ஸ்மார்ட் கார்ட் நகல் **வாசாஆ** 19 (**அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது**) ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.